# மண்ணையும், மக்களையும் காத்த நீதியின் தூதர்...

## அருள் பணியாளர் ஸ்டேன் சுவாமி சே.ச.

*“ஏழை மக்கள் பயணிக்கிற சாதாரண பெட்டியிலேயே ரயிலில் பயணிக்க விரும்புகிறேன். தனிப்பட்ட தேவைக்கென்று எனக்குப் பணம் எதுவும் வேண்டாம். போகிற இடத்திலெல்லாம் மக்கள் என்னை நன்றாக கவனித்துக் கொள்கிறார்கள்.”*

*- அருள் பணியாளர் ஸ்டேன் சுவாமி சே.ச*



- இளம் வயதிலிருந்தே சமூகப் பிரச்சினைகளை அறிந்து கொள்வது, ஆய்வு செய்வது, தீர்வுகளைத் தேடுவதென்று மக்கள் மீது ஆர்வம் காட்டினார்.
- இந்திய சனநாயகம், அரசியல் சாசனம், மனித உரிமைகள், தலைமைத்துவம் ஆகிய தலைப்புகளில் ஆழமான பயிற்சி பெற்றார்.
- பல்வேறுபட்ட சமூகக் குடியுரிமை குழுக்களுக்கு அவரே பயிற்சி வகுப்புகள் நடத்தினார். ஆழமான சிந்தனையும், பயிற்சியும், ஆய்வும்தான் அவரை ஜார்க்கண்ட் மாநிலத்தில் பழங்குடியினரின் உரிமைகளுக்காகப் பணியாற்ற உந்தித் தள்ளின.
- பின்தங்கிய மாநிலமான ஜார்க்கண்டில் உள்ள பழங்குடியினரின் வாழ்வோடு கலந்து, அவர்களுடைய அன்றாட வாழ்க்கைமுறை, இயற்கையோடு கொண்டுள்ள உறவு, பண்பாடு, நம்பிக்கை, சடங்குகள் அனைத்தையும் ஆழமாக அறிந்து, உணர்ந்து கொள்ள அம்மக்களோடு தங்கி, தொடர்ந்து அவர்களோடு வாழ்ந்து வந்தார்.
- அவர்களின் மண் சார்ந்த உரிமைகளைப் பெற அவர்களோடு சேர்ந்து பல திட்டங்களைத் தீட்டினார். கிராமிய–சுய நிர்வாகம் அவர்கள் நடுவில் சிறப்பாகவும் வலுவாகவும் இருப்பதைக் கண்டு அதை வலுப்படுத்த ஊக்குவித்தார்.
- இந்திய அரசமைப்புச் சட்டத்தின் ஐந்தாவது அட்டவணையில் சொல்லப்பட்டுள்ளது போல் பழங்குடியினரை உறுப்பினர்களாகக் கொண்ட பழங்குடியினர் ஆலோசனைக்குழு அமைக்க வேண்டும் என்று குரல் கொடுத்தார்.
- 1996–இல் ஒன்றிய அரசால் கொண்டுவரப்பட்ட பழங்குடியினர் கிராமப் பஞ்சாயத்து விரிவாக்கச் சட்டம் (பெசா) ஏன் கிடப்பில் போடப்பட்டுள்ளது என்று கேள்வி எழுப்பினார்.
- நல்ல விளைச்சலைத் தரும் பழங்குடியினரின் வளமான நிலங்களை, கனிம வளங்களைத் தோண்டி எடுக்க, அம்மக்களைக் கலந்தாலோசிக்காமல், திரைமறைவு ஒப்பந்தங்கள் மூலம், அரசே அவற்றை தனியார் நிறுவனங்களுக்குத் தாரை வார்த்தது. இதை எதிர்த்து, மக்களின் பிரதிநிதியாக நின்று கேள்வி எழுப்பினார்.
- உரிமை உணர்வோடு தலைவர்களாக எழுந்துவரும் ஆயிரக்கணக்கான பழங்குடியின இளைஞர்களை நக்சல்பாரிகளோடு தொடர்புபடுத்தி, அவர்கள் மீது பொய் வழக்குகள் புனைந்து, விசாரணையே இன்றி, கைதிகளாகப் பல்லாண்டுகள் வைத்திருந்ததை உள்நோக்கம் கொண்ட செயல் என்று மாநில – ஒன்றிய அரசுகளை எதிர்த்து வழக்குகள் தொடர்ந்ததோடு, பழங்குடியின மக்கள் குழுக்களோடு இணைந்து பல போராட்டக் களங்களில் குரல் எழுப்பினார்.
- மஹாராஷ்டிரத்தின் பீமா கொரேகான் கலவரத்திற்குப் பின்னால் இருந்தாகக் குற்றம் சுமத்தப்பட்ட அறிவுஜீவிப் போராளிகளுடன் ஸ்டேன் சுவாமி தொடர்பு கொண்டிருந்ததாகப் பொய்க்குற்றம் சுமத்தி, அவரை 8 அக்டோபர் 2020 அன்று தேசியப் புலனாய்வுத்துறை கைது செய்தது.

- **தேசியப் புலனாய்வு அமைப்பின் கீழ் கைது செய்யப்பட்ட அவரை முன்னறிவிப்பேதுமின்றி, கள்வனைப் போல இராஞ்சியிலிருந்து மும்பைக்குக் கொண்டு சென்று சிறைச்சாலையில் அடைத்து, அடுத்தடுத்து பல ஆதாரமற்ற வலுவான தேசத்துரோக வழக்குகள் போட்டு, நீதிமன்ற விசாரணைக் கைதியாக 9–மாதங்கள் விசாரணை ஏதுமின்றி வைத்திருந்தனர்.**
- 84 வயதான ஸ்டேன் சுவாமி, ''*கடந்த 40 ஆண்டுகளுக்கும் மேலாகப் பழங்குடியினரின் சுயநிர்வாகம், நிலம், நீர், காடு சார்ந்த உரிமைகளுக்காகவும், அவர்களுடைய ஒட்டுமொத்த வளர்ச்சிக்காகவும் உழைத்ததைத் தவிர நான் வேறு என்ன தவறு செய்து விட்டேன்?*'' **என்று கேள்வி எழுப்பினார்.**
- **முதிர்ந்த வயது, பார்கின்சன் (கைநடுக்க) நோயால் ஏற்பட்ட தற்சார்பு இயலாமை மற்றும் பிற நோய்கள் காரணமாக அடுத்தடுத்து மருத்துவரீதியிலான பிணை கேட்ட போதும் நீதிமன்றம் இறுதி வரை மறுத்து விட்டது.**
- **கைநடுக்கம் காரணமாக, நீர் அருந்துவதற்குச் சிறையில் தனக்கு உறிஞ்சுகுழல் வேண்டும் என்ற அவரது வேண்டுகோள் ஏற்கப்படாதது கண்டு, பொதுமக்கள் நாடெங்கும் கொதித்துக் கொந்தளித்து குரல் எழுப்பிய பின்னரே அவருக்கு உறிஞ்சுகுழல் வழங்கப்பட்டது.**
- **உடல்நலம் மோசமான நிலையிலும் அவரை மருத்துவமனை சிகிச்சைக்கு அனுப்பினார்களே தவிர, பிணையில் வெளிவிடவில்லை.**
- **மனநலமும், உடல் நலமும் மெதுமெதுவாய்ப் பாதிக்கப்பட்டு, கொரோனா பாதிப்பிற்கும் ஆளாகியிருந்த ஸ்டேன் சுவாமி 28 மே 2021 அன்று மும்பையில் உள்ள திருக்குடும்ப மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். இறுதியில், சிகிச்சை பலனின்றி 5 ஜூலை 2021 அன்று காலமானார்.**

''*ஒன்றிய அரசும், நீதிமன்றமும் ஒரு முதியவரை, மாண்புடைய மனித உரிமைப் போராளியைக் கொன்றுவிட்டன. ஸ்டேன் சுவாமி போன்ற அன்பான, மனிதநேயமிக்க ஒருவரை நம்மால் இனிமேல் சந்திக்க முடியாது.*'' **– என்று வழக்கறிஞர்** *திரு. பிரசாந்த்* **பூஷன் அவர்கள் தன் இரங்கலுரையில் பதிவு செய்தார்.**

''*சிறு வயதிலிருந்தே போராட்ட குணமுள்ள இளைஞனாக வளர்ந்த ஸ்டேன் சுவாமி, தன்னுடைய இறுதி மூச்சுள்ளவரை நீதிக்காகப் போராடிய மனிதராகத் தடம் பதித்துச் சென்றிருக்கிறார்.'' – திரு. தாமஸ் ஆல்பர்ட்*

''*அவர் சமூகப் பகுப்பாய்வு வகுப்பு நடத்தினால் எல்லோருக்கும் எளிதில் புரியும்படியாகவும், அதே நேரத்தில் ஆழமான சிந்தனைக்கும், சமூக ஈடுபாட்டிற்கும் உந்தித் தள்ளுகின்ற வகையிலும் இருக்கும்.''– அருள் பணியாளர் செபமாலை ராசா சே.ச.*

''*ஸ்டேன் சுவாமி ஒரு போதும் வன்முறையை விரும்பியதில்லை. அமைதியான, சட்டரீதியாலான, சனநாயக வழியிலேதான் போராட்டங்களை முன்னெடுத்தார். சாதி, மதம், இனம், மொழியைக் கடந்து எல்லோரையும் பாரபட்சமின்றி நேசித்ததோடு, அவர்களைத் தோழர்கள் என்றழைத்தார்.'' – அருள் பணியாளர் ஃப்ரேஸர் சே.ச.*

''*சாகும் தருவாயில் கூட தன்னுடைய உடலை மருத்துவக் கல்லூரிக்குத் தானம் செய்ய விரும்புகிறேன் என்று கூறினார்.'' – அருள் பணியாளர் ஜோ சேவியர் சே.ச.*

## *தந்தை ஸ்டேன் சுவாமியின் வழியில்...*

- ✓ மனித உரிமையை நசுக்கும் அரசை எதிர்த்துத் தொடர்ந்து குரல் கொடுப்போம்; அடிப்படை உரிமைகளை அடியோடு அழிக்கும் அனைத்துச் சட்டங்களையும் உடனடியாக ரத்துசெய்ய ஒன்றிணைந்து போராடுவோம்.
- ✓ பொய்க்குற்றம் சாட்டப்பட்டு, போதுமான சான்றுகள் ஏதுமின்றி சிறையிலே இன்றளவும் வாடும் அனைத்து சிறைக்கைதிகளையும் விடுதலை செய்யத் தொடர்ந்து போராடுவோம்.
- ✓ மண்ணையும், மக்களையும் காக்கப் பழங்குடியின மக்களோடு இணைந்து நின்று போராடுவோம்; அநீதியை எதிர்த்து, நீதிக்காகத் தொடர்ந்து குரல் கொடுப்போம்.
- ✓ உண்மையும், நீதியும், அமைதியும் நிறைந்த இந்திய நாட்டைக் கட்டியெழுப்ப சூளுரைப்போம்.

*– தமிழக இயேசு சபை*